# நிலாவின் நூலகம் -1

- ***ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமை சார்ந்த பிரச்சனை இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு சார்பான பிரச்சனையாகும்...>***

அனைவருக்கும் பணிவான வணக்கம்.

இந்த ஆய்வானது கீழ்வரும் விடயங்கள் குறித்து மேற்கொள்ளப்படுகின்றது.

கடந்த காலங்களில் இந்திய உள்ளக முரண்களுக்குள் ஈழத்தமிழர்களாகிய எமது உரிமைப் பிரச்சினையானது சிக்கவைக்கப்பட்டது.

அதாவது இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை சார்ந்த பிரச்சனையால் தான் ஈழத்தமிழர்களாகிய நாம் இன்றுவரை இழப்புக்களை, இனப்படுகொலைகளை இனவழிப்பை சந்தித்து வருகின்றோம் என்ற உண்மையை முற்று முழுதாக புறந்தள்ளிவிட்டனர். அல்லது இந்தியாவின் தேசியப் பாதுகாப்பும் ஈழத்தமிழர்களுடனான வெளியுறவுக் கொள்கையும் என்ற கோணத்தில் ஆய்வுகளை முற்று முழுதாக மறைப்புச் செய்துவிட்டனர்.

இதனை நடைமுறையில் உறுதிப்படுத்தும் முகமாக

ஈழத்தமிழர்களாகிய நாமும் தமிழகத்திலும் இதர மாநிலங்களிலும் உள்ள இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இந்திய மத்திய அரசால் நோக்கப்படுகின்ற பலருடனேயே இன்றுவரை உறவினைப் பேணுகின்றோம் என்பதே உண்மையாகும். இவ்வாறாக ஈழத்தமிழர்கள் நடந்துகொள்வதற்கு ஈழத்தமிழர்களின் இயலாமையும், முயலாமையும், அறியாமையும், இந்தியாவிற்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையே ஏற்பட்ட நீண்டகால இடைவெளியும்,காரணமாகும். அத்துடன் ஈழத்தமிழர்களினதும், இந்தியாவினதும் எதிரிகளின் தொடர்ச்சியான நடத்தப்படுகின்ற கருத்தியல் யுத்தத்தின் தாக்கமானது இந்தியர்களிற்குள்ளும் ஈழத்தமிழர்களிடையும் ஏற்படுத்துகின்ற பின்விளைவுகளுமாக நடைமுறையில் அவதானிக்க முடிகின்றது. இதுவே இன்றைய ஈழத்தமிழர்களினதும், இந்தியர்களினதும் நம்பிக்கையான புரிதலுக்கு மாபெரும் முட்டுக்கட்டையாக உள்ளது.

மொழியால் ஈழத்தமிழர்கள் தமிழகத்துடன் தொடர்புபட்டுள்ளதாலும், தமிழக அரசியலும் மொழியை மையப்படுத்திய அரசியலாக இருந்ததாலும் ஈழத்தமிழர்களுக்கும் தமிழகத்திற்கும் இடையே இருந்த இந்த பொதுப்பண்பை வைத்துக்கொண்டு ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமை தொடர்பிலான பிரச்சனையை இந்திய உள்ளக முரண்களில் சிக்க

வைப்பதும் இலகுவான ஒன்றானதாக ஈழத்தமிழர்களின் எதிரிகளுக்கும் இந்தியாவின் எதிரிகளுக்கும் அமைந்தது. அதனை அவர்கள் தமது நலனுக்கேற்ப மாற்றியமைத்தார்கள். அதுமட்டுமன்றி இந்தியாவில் ஆழமாக புரையோடியுள்ள நிர்வாக ரீதியான சாதிய வேறுபாடுகளையும், ஒடுக்குமுறைகளையும் ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமை சார்ந்த பிரச்சனைகளுக்குள் பொதுப்பண்பாக்கியும் ஈழத்தமிழர்களையும் இந்தியாவையும் பிரித்தார்கள்.

(இலங்கையில் நிர்வாக ரீதியாக சாதியமானது 1910 ஆம் ஆண்டின் பின்னர் இல்லாதொழிக்கப்பட்டது. ஆனால் சமூகப் பண்பாட்டில் தமிழரிடையே அங்கொன்றும் இங்கொன்றுமாக சாதிய நடைமுறை உள்ளதை சிங்கள பேரினவாத இனவாத அரசு ஈழத்தமிழர்களிடையே சாதிய பிரச்சனையானது மிக மிக பூதாகரமாக ஒன்றாக இருப்பது போலான மாயத்தோற்றத்தை காட்டியுள்ளது. அதுமட்டுமன்றி சிங்களவர்களிடையே ஆணிவேரைப் போல மிக இறுக்கமாக உள்ள நடைமுறையில் காணப்படுகின்ற சாதிய கட்டமைப்புக்களைக் குறித்தும், பௌத்த மகாசங்கங்களின் சாதிய முறைகளை குறித்து முழுவதுமாக திட்டமிட்டு மறைத்துள்ளனர்.

இந்தியாவில் உள்ள சாதிய பாகுபாடும் அதனூடாக நிர்வாகத்தில் நலன்களை பெறும் வாய்ப்புகளும் நடைமுறையில் உள்ளது. இது 100 வீதம் சரியாக கடைபிடிக்கப்கடுகின்றதா இல்லையா என்ற வாதத்தை இங்கே விமர்சிக்கவில்லை)

ஈழத்தமிழர்களின் சமூகப்பண்பாட்டில் வாழ்வியல் நடைமுறையில் பெரும்பான்மையினர் சைவமத நம்பிக்கையை கொண்டிருந்தாலும் பெரும்பான்மை இந்தியர்களின் மனதில் ஈழத்தமிழர்களை தவறான தகவல்களைக் கொடுத்து கருத்தியல் ரீதியாக கிறிஸ்தவர்கள் என வட இந்திய மாநிலங்களில் பல கொள்கை வகுப்பாளர்களும் நம்புகின்ற அளவிற்கு இலங்கை அரசின் கருத்தாக்கம் அமைந்துள்ளது. அது மட்டுமன்றி தென்னிந்திய கொள்கைவகுப்பாளர்களில் பலரும் இதனை இவ்வாறே ஆழமாக நம்புகின்றனர்.

ஈழத்தமிழர்களுக்கும் இந்திய முடிவெடுக்கும் அதிகார வர்க்கத்திற்கும் இடையே ஏற்படுத்தப்பட்டுள்ள நம்பிக்கையீனமானது சிறியளவிலான ஒன்றல்ல. அது மிகப்பெரியதொரு ஆழியாக உள்ளது.

இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் உலகில் எந்த நாடுகளுக்கு சென்றாலும் முதலில் தமிழ்மொழிப் பாடசாலைகளையும்,சம நேரத்தில் சைவக் கோவில்களை உருவாக்குவதனையும் தமது தலையாய கடமையாக கொண்டு இருந்ததை முற்று முழுதாக இந்திய முடிவெடுக்கும் அதிகாரத்தின் கட்புனில் இருந்து மறைத்து விட்டுள்ளனர். ஈழத்தமிழர்களாகிய எம்மிடையே சமூகப் பண்பாட்டிற்குள் உள்ள

*கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற நம்பிக்கை குறித்தும் இந்திய அதிகார மையத்தின் விழிப்புலனில் இருந்து அகற்றப்பட்டுள்ளது அல்லது மறைக்கப்பட்டுள்ளது.

ஈழத்தமிழர்களின் அரசியல் பிரச்சனை குறித்தும் சரியான புரிதலற்ற நிலையையே வட இந்தியர்களிடையே உள்ள அதிகார வர்க்கத்தினரிடமும் தென்னிந்தியாவில் உள்ள அதிகார வர்க்கத்தினரிடமும் காணப்படுகின்றது. இத்தகைய புரிதலற்ற நிலையிலும் இந்திய அதிகார மையமானது தாம் நம்பியபடியான முயற்சிகளை ஏற்படுத்தியது. நாம் நம்பியவர்களை அழைத்து ஈழத்தமிழர்களின் பிரச்சனை குறித்து இந்தியா பேசியது. இந்தியாவின் நம்பிக்கையை உடைக்கும் வகையிலேயே இந்தியாவிற்குச் சென்று ஈழத்தமிழர்களின் அரசியல் நலன்குறித்து பேசிய ஈழத்தமிழர்களும் நடந்துள்ளார்கள்.

இதற்கு சிறந்த உதாரணமாக 2010 ஆம் ஆண்டுகளின் பின்னரான காலத்தில் ஈழத்தமிழர்களுடன் நல்லுறவைப் பேண என இந்திய அரசு நம்பிய தலாய்லாமாவிற்கு நிகராக இந்திய அரசு நம்பிய சி. வி விக்கினேஸ்வரன் அவர்கள் இந்தியாவின் நம்பிக்கையை உடைத்தார். இந்திய அரசு சி. வி விக்கினேஸ்வரனின் நடைமுறை வாழ்வியலைக் குறித்து ஆய்வினை மேற்கொண்டு இருந்தால் இத்தகைய நம்பிக்கையீனம் இந்திய அரசிற்கும் ஏற்பட்டு இருந்திருக்காது.

ஈழத்தமிழர்களின் உணவுப் பழக்கம் குறித்தும் இந்திய அதிகார மையத்திடம் புரிதலற்ற நிலையுண்டு

மாட்டிறைச்சி ஈழத்தமிழர்களின் தேசிய உணவு என்பதான கருத்தியலைக் கூட விசுவ இந்து பரிஷத் அமைப்பினர் கொண்டுள்ளனர். இதற்கு சில ஈழத்தமிழர்களும் இந்திய உள்ளக அரசியல்கட்சிகள் சில இத்தகைய கோசத்துடன் பயணிக்க அவர்களுடன் ஈழத்தமிழர்களின் தமிழ்த்தேசியவாதிகளாக காட்டிய அரசியல்வாதிகள் உறவினைப் பேணியமையும் இந்திய கொள்கை வகுப்பாளர்கள் இத்தகைய முடிவினை நோக்கி நகர காரணமாக இருக்கலாம்.

இலங்கையில் இருந்து மதரீதியான அரசியலை கடந்த சில காலமாக முன்னெடுத்து வரும் ஒருசிலர் தமது குறிப்பாக மறவன் புலவு சச்சிதானந்தமும் அவரது குழுவும் தமது நலன்களை கருத்தில் கொண்டு வட இந்தியர்களில் ஒரு சிலரை திருப்திப்படுத்தும் நோக்கில் மீண்டும் மீண்டும் ஈழத்தமிழர்களின் பிரச்சனையை இந்திய உள்ளக அரசியலுக்குள் புதைத்து வருகின்றனர். இதுவும் இந்தியாவில் ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமை தொடர்பிலான பிரச்சனையை கையாள்வதில் மாபெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. இது மட்டுமன்றி இலங்கையில் உள்ள ஈழத்தமிழர்களுக்கும், இலங்கைச் சோனகர்களின் அரசியல் கட்சித் தலைமைகளுக்கும் மலையகத் தமிழர்களின் அரசியல்

தலைமைகளுக்கும் இடையிலான பிரச்சனை இலங்கை அரசு தனது நலன்களுக்கேற்ப பயன்படுத்துகின்றது. இதுகுறித்த ஆழமான புரிதலை இந்திய கொள்கைவகுப்பாளர்கள் கவனத்தில் எடுக்கத் தவறுகின்றனர்.

தமிழக அரசாங்கங்களின் சில அரசியல்வாதிகள் தமது உள்ளக அரசியலை மையப்படுத்தி ஈழத்தமிழர்களின் உள்ளக முரண்களை தமக்கு சாதகமாக பயன்படுவதும் சிங்கள அரசும் குறித்த இந்த விடயங்களை ஊக்குவிப்பதும் நடந்தேறி வருகின்றது.

ஈழத்தமிழர்கள் என்ற சிறிய இனத்தின் பிரச்சனையும் ஈழத்தமிழர்கள் வாழ்கின்ற கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலப்பரப்பானது ஈழத்தமிழர்களின் வரமாவும், ஈழத்தமிழர்களின் சாபமாகவும் உள்ளது. ஈழத்தமிழர்களுக்கு தமது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வாழ்வியல் தாயகம் குறித்த புரிதலற்ற நிலையே பலரிடம் உள்ள போது ஈழத்தமிழரில்லாத மற்றவர்களிடம் அவர்கள் ஒரே மொழி பேசினாலும் எவ்வாறான புரிதல் ஏற்படும் என்பதை நாம் ஆழமாக புரிந்துகொள்ள வேண்டும்.

இறுதியாக, ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமைகள் தொடர்பிலான பிரச்சனையை அதாவது இந்தியாவின் தேசியப் பாதுகாப்புடன் தொடர்புபட்ட பிரச்சனையை இந்தியாவின் உள்ளக முரண்களுடன் தொடர்புபட்ட பிரச்சனைகளுடன் இணைப்பது எப்போதும் இந்தியாவினதும், ஈழத்தமிழர்களினதும் எதிரிகளுக்கு சேவகம் செய்கின்ற பணியாகவே அமையும்.

இன்றைய சூழலில் இந்திய அரசின் செயற்பாடுகளை ஆழமாக கவனத்திலும் கருத்திலும் கொண்டால் இன்றுவரை ஈழத்தமிழர்களின் பிரச்சனை குறித்த ஆழமான புரிதலை முடிவெடுக்கும் அதிகார வர்க்கம் கொண்டிருக்கவில்லை என்பதனை உறுதிபடக் கூறலாம். இவ்வாறு இந்திய அதிகார வர்க்கம் முடிவெடுக்க இன்றுவரையிலும் ஈழத்தமிழர்களின் நடைமுறைச் செயற்பாடுகள் தான் காரணம் என்பதனையும் இங்கு வலுவாக பதிவுசெய்ய வேண்டும்.

இந்துசமுத்திர பிராந்தியத்தில் உள்ள இந்திய உபகண்டமான ஓர் வல்லரசு தனது பார்வையில் இருந்து எவ்வாறு ஈழத்தமிழர்களை நோக்கும் என்பதனை ஈழத்தமிழர்களாகிய நாங்களும் புரிந்திட வேண்டும்.

**காவியா (நிலா)**
**06 : 43**
**06 - Nov - 2023**
**பாரதம்**